## வேலைவாய்ப்பு மற்றும் இதர பயிற்சிகள்:

1. பயிற்சியின் போது Industrial Visit மற்றும் Inplant Training வழங்கப்படும்
2. பயிற்சி முடிந்தவுடன் உதவித்தொகையுடன் கூடிய தொழிற்பழகுநர் பயிற்சி (National Apprenticeship Certificate) மற்றும் முன்னனி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு

## உயர்கல்விக்காக 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பிற்கு இணையான சான்றிதழ் :

8–ஆம் வகுப்பு மற்றும் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று ITI– யில் சேர்ந்து தேர்ச்சிபெறும் பயிற்சியாளர்கள் உயர்கல்வி பெறும் வகையில் கீழ்கண்ட நிபந்தனைகள் அடிப்படையில் 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பிற்கு இணையான கல்விச்சான்றிதழ் பள்ளிக்கல்வித்துறை மூலமாக வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 10–ஆம் வகுப்பிற்கு இணையான கல்விச்சான்றிதழ் | (i) | 8–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று ITI– யில் ஓராண்டு தொழிற்பிரிவில் சேர்ந்து தேர்ச்சிபெறும் பயிற்சியாளர்கள் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சி சான்றிதழ் (NAC) பெற்றிருப்பின் அரசுத் தேர்வுகள் இயக்கத்தால் நடத்தப்படும் 10–ஆம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழித்தேர்வுகளில் தேர்ச்சிபெறும் பட்சத்தில் 10–ஆம் வகுப்பிற்கு இணையான கல்விச்சான்றிதழ் வழங்கப்படும். |
| | (ii) | 8–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று ITI– யில் ஈராண்டு தொழிற்பிரிவில் சேர்ந்து தேர்ச்சிபெறும் பயிற்சியாளர்கள் அரசுத் தேர்வுகள் இயக்கத்தால் நடத்தப்படும் 10–ஆம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழித்தேர்வுகளில் தேர்ச்சிபெறும் பட்சத்தில் 10–ஆம் வகுப்பிற்கு இணையான கல்விச்சான்றிதழ் வழங்கப்படும். |
| 12–ஆம் வகுப்பிற்கு இணையான கல்விச்சான்றிதழ் | (i) | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று ITI– யில் ஓராண்டு தொழிற்பிரிவில் சேர்ந்து தேர்ச்சிபெறும் பயிற்சியாளர்கள் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சி சான்றிதழ் (NAC) பெற்றிருப்பின் அரசுத் தேர்வுகள் இயக்கத்தால் நடத்தப்படும் 11–ஆம் மற்றும் 12–ஆம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழித்தேர்வுகளில் தேர்ச்சிபெறும் பட்சத்தில் 12–ஆம் வகுப்பிற்கு இணையான கல்விச்சான்றிதழ் வழங்கப்படும். |
| | (ii) | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று ITI– யில் ஈராண்டு தொழிற்பிரிவில் சேர்ந்து தேர்ச்சிபெறும் பயிற்சியாளர்கள் அரசுத் தேர்வுகள் இயக்கத்தால் நடத்தப்படும் 11–ஆம் மற்றும் 12–ஆம் வகுப்பு தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழித்தேர்வுகளில் தேர்ச்சிபெறும் பட்சத்தில் 12–ஆம் வகுப்பிற்கு இணையான கல்விச்சான்றிதழ் வழங்கப்படும். |